மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவனம் (PGIHS)
பேராதனைப் பல்கலைக்கழகம்

பணிப்பாளர் பதவிக்கான விண்ணப்பங்களைக் கோரல்

பேராதனைப் பல்கலைக்கழக மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் (PGIHS) பணிப்பாளர் பதவிக்காக, கல்வி ஊழியர் உறுப்பினர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவனமானது மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானத்தில் உயர் கல்வியை வழங்கல், ஊக்குவித்தல் மற்றும் மேம்படுத்தும் நோக்கத்திற்காக 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 24ஏ பிரிவின் கீழ் உயர் கல்வி அமைச்சின் மூலம் கட்டளைச் சட்டத்தைக் கொண்டு நிறுவப்பட்ட ஒரு தேசிய நிறுவனமாகும். அதன் கட்டமைப்பு, அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயற்பாடுகள் 2013ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் கட்டளைச் சட்டத்தால் பரிந்துரைக்கப்பட்டது. நிறுவனத்தின் கட்டளைச் சட்டத்தின் கீழ் விண்ணப்பதாரர் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கல்வி ஊழியர்களின் உறுதி செய்யப்பட்ட ஓர் உறுப்பினராக இருத்தல் வேண்டும்.

PGIHS இன் கட்டளை விதிகளுக்கு அமைய, பணிப்பாளரானவர், நிறுவனத்தின் முதன்மை நிறைவேற்று அதிகாரியாகவும், முதன்மை கல்விசார் அதிகாரியாகவும் கணக்கியல் அதிகாரியாகவும் இருப்பார். பணிப்பாளரானவர் முகாமைத்துவ சபையின் தலைவர் மற்றும் நிறுவனத்தின் ஒவ்வொரு கற்கை சபைகளில் பதவி நிலை உறுப்பினராக உள்ளார். நியமிக்கப்படும் பணிப்பாளர் நியமிக்கப்பட்ட திகதியில் இருந்து மூன்று ஆண்டு காலத்திற்கு அல்லது அவர் (பெண்/ஆண்) 65 வயதை எட்டும் வரையான காலம் ஆகிய இரண்டில் முதலில் வரும் நிகழ்வு வரை பதவி வகிப்பார். விண்ணப்பதாரியானவர் இலங்கைப் பிரஜை யொருவராகவிருப்பதுடன் 63 வயதிற்கு குறைவாகவுமிருத்தல் வேண்டும்.

ஆய்வு மற்றும் மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானத்தில் திறனாய்வுச் சிந்தனைக்கான பட்டப்படிப்புக் கற்கையில் நாட்டில் முன்னிலை பெறுவதும் பிராந்தியத்தில் சிறந்த மையமாக விளங்குவதுமே நிறுவனத்தின் தொலைநோக்காகும். ஏற்கப்பட்ட கூட்டுத்திட்டத்தின் கீழ், தமது கல்விசார் நிகழ்ச்சிகளை விரிவுபடுத்தவும் புதிய மற்றும் தேவைக்கேற்ப பலதரப்பட்ட கற்கை நிகழ்ச்சிகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் ஆராய்ச்சித்துறைகளை ஏற்படுத்தவும் ஆராய்ச்சி மற்றும் சமூக மேம்பாட்டு செயலில் ஈடுபடவும் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. நிறுவனத்தின் செயற்பணியை நிறைவேற்றுவதற்கான நோக்குடைய ஒரு சிறந்த, கல்விசார் பின்னணி மற்றும் ஆராய்ச்சி மற்றும் முகாமைத்துவத்தில் சிறந்த பதிவினைக் கொண்டுள்ள தனிநபரை PGIHS இன் முகாமைத்துவ சபையானது எதிர்பார்க்கின்றது.

எதிர்பார்க்கும் விண்ணப்பதாரர் நிர்வாக அனுபவத்துடன் கலாநிதிப் பட்டம் பெற்றிருத்தல் விரும்பத்தக்கதாக அமைவதுடன் பட்டப்படிப்பு தகைமைகளையும் பெற்றிருத்தல் வேண்டும். அவர் (ஆண்/பெண்) பல்துறை கல்விசார் சூழல் ஒன்றில் பணியாற்றுவதற்குத் தேவையான ஆளிடைத் திறன்களை பெற்றவராகவும் நிறுவனசார் சமூகத்திற்கு ஆற்றவேண்டிய பொறுப்புக்களை உணர்ந்தவராகவும் இருத்தல் வேண்டும். வெற்றிகரமான அபேட்சகர் பல்கலைக்கழகத்திற்கு மற்றும் ஏனைய தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களுடன் பணியாற்றும் உறவுகளை ஏற்படுத்தும் அதே வேளையில் கல்விசார் தலைமைத்துவத்தை வழங்குவதற்கான பொறுப்பினையும் பெற்றிருப்பார். பணிப்பாளர் பதவிக்கு பொருந்தக்கூடிய சம்பளம் மற்றும் பிற கொடுப்பனவுகளுக்கு உரித்துடையவராக இருப்பார்.

எதிர்பார்க்கும் விண்ணப்பதாரர் இந்தப் பதவிக்கு தாம் நியமிக்கப்பட்டால் மேற்கொள்ளும் அடைவுக்கான தமது முன்மொழிவுகளின் சுருக்கமான பதிவொன்று மற்றும் நிறுவனத்தின் அபிவிருத்திக்கான தமது தொலைநோக்கு தொடர்பான அறிக்கையொன்று, பிறந்த திகதி அடங்கலான முழுமையான சுயவிபரக் கோவையுடன் சேர்த்து தமது (பெண்/ஆண்) விண்ணப்பத்தை அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பமானது 2026 நவம்பர் 19ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக உதவிப் பதிவாளர், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவனம், பேராதனைப் பல்கலைக்கழகம், பேராதனை என்ற முகவரியில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது தனிப்பட்ட முறையில் நேரடியாக பி.ப 4.00 மணிக்கு முதல் ஒப்படைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பணிப்பாளர் பதவி, மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவனம், பேராதனைப் பல்கலைக்கழகம்" என குறிப்பிடப்படல் வேண்டும்.

மேலும், விண்ணப்படிவம் மற்றும் இணைக்கப்படும் ஆவணங்களின் மென்நகல் வடிவத்தை PDF உருவில் ar@pgihs.ac.lk என்ற மின்னஞ்சல் வழியாக அனுப்புதல் வேண்டும்.

இப்பதவிக்கான தெரிவானது, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UCG) 2024 ஜனவரி 01ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட UGC சுற்றறிக்கை இலக்கம் 01 / 2024இல் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்படும். பணிப்பாளர் தெரிவுக்கான நியமன நடைமுறை தொடர்பான மேலதிக விபரங்களுக்கு குறிப்பிட்ட சுற்றறிக்கையைப் பார்வையிடவும்.

081-2388957 என்ற தொலைபேசி வழியாக மற்றும் **ar@pgihs.ac.lk** என்ற மின்னஞ்சல் வழியாக அல்லது **www.pgihs.ac.lk** என்ற இணையதளத்திற்கு பிரவேசிப்பதன் மூலமும் மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவன உதவிப் பதிவாளரிடமிருந்து மேலதிக விபரங்கள் மற்றும் இற்றைவரையாக்கப்பட்ட தகவல் ஆகியவற்றை பெற்றுக் கொள்ளலாம்.

உதவிப் பணிப்பாளர்,

மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவனம்,

பேராதனைப் பல்கலைக்கழகம்.

2026 ஒக்டோபர் 20